பிவா.சா 1 சுந்தரமூர்த்தி .O.S.No. 145/2019 30.01.2023

வாதி தரப்பு குறுக்கு விசாரணை –

வழக்கிடை சொத்துக்கள் 3 அட்டவணையாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவைகள் எந்தெந்த சொத்து என்று படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். முதல் அட்டவணை சொத்துக்களில் 4 முதல் 10 அயிட்ட சொத்துக்கள் என் தகப்பனார் மூதையார் சொத்து என்றும் அதற்கு தற்போது வரை பிரிக்கப்படவில்லை என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மற்ற சொத்துக்கள் பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகள் அவர்கள் திருமணத்தின்போது போதிய சீர்வரிசைக்ள செய்து கொடுத்து விட்டதால் அவர்கள் வாய்மொழியாக தன்னுடைய பங்கினை விட்டு கொடுத்துவிட்டார்கள் என்பது தான் என் வழக்கு என்றால் சரிதான். தாவா 3 அயிட்ட சொத்தில் தான் குடியிருக்கிறேன். அதற்கான பட்டா எனது பெயரில் தான் இருக்கிறது. 4 முதல் 10 அயிட்ட சொத்துக்கள் எனது தகப்பனாருக்கும் அவர்களுடைய சகோதரர்களுக்கும் இடையே பாகம் பிரிக்காமல் இருக்கிறது என்று சொல்வத தவறு என்றாலும் அது பாகம் பிரிக்கப்பட்டு என் தகப்பனார் பங்கிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகளுக்கு சம பங்கு உள்ளது என்றாலும் அதை கொடுக்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே என் தகப்பனாருக்கும் அவர்களுடைய சகோதர்களுக்கும் இடையே பாகம் ஏற்பட்டுவிட்டதால் அவர்கள் இந்த வழக்கில் அவசிய தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. 4 முதல் 10 அயிட்ட சொத்துக்கள் கூட்டு பட்டாவாக இருப்பதற்கு காரணம் அது பட்டா மாறுதல் செய்யாமல் இருப்பது காரணம் என்றால் சரியல்ல. 2 அட்டவணை சொத்தில் 1வது அயிட்டம் என் சித்தப்பா பெயரில் தவறுதலாக பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . அது என் சித்தப்பா பெயரில் இல்லை.

அது என் தகப்பனார் சொத்துதான். வாதிக்கு பங்கு உரிமை உள்ளது என்றாலும் அதை பொய்யாக மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல.